# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 11/2020** **நாள்: 28.01.2020**

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் 28.01.2020 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்ற 27 மாவட்டங்களைச் சார்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்கள் (தேர்தல்) ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேர்தல்களில் பங்கு பெற்ற வேட்பாளர்களின் விபரங்கள், வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட விபரம், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் இறந்ததால் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்ட விபரம், வேட்பாளர்கள் போட்டியிட்ட கட்சிகள் பற்றிய விபரம், வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள், மறைமுகத் தேர்தலில் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர், ஊராட்சித் துணைத் தலைவர் ஆகிய பதவிகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான விவரங்களை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் தொடர்பான வழக்குகளை உடனுக்குடன் கவனம் செலுத்தி தேவையான ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் அதன் விபரத்தை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஆணையத்தில் பணியாற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

28/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்.